ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2191/5 - 2020 අගෝස්තු මස 31 වැනි සඳුදා - 2020.08.31

*2191/5 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 31 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ(1) ஆம் பிரிவின் கீழ் கொழும்பு மாநகர சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

கொழும்பு மாநகர சபையின் தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்ட உறுப்பினர் ஒருவரின் பதவி, கேட்டு விலகல் காரணமாக வெற்றிடமாயிருக்கின்றதாதலாலும் ;

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ(1) ஆம் பிரிவின் கீழ், கொழும்பு மாநகர சபைக்கு தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்ட மொஹமட் பிரதீப் காதர் என்பவர் அங்கம் வகிக்கின்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான ஐக்கிய சமாதான கூட்டமைப்பு கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 9 ஆம் பிரிவின் கீழ் தகைமையுடைய வேட்பாளரொருவராக, உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவருமான கொழும்பு மாநகர சபையின் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினர் தொடர்பாகத் தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளரினால் அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காக இம்தியாஸ் அஹ்மட் கலீலுர் றஹ்மான் என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும் ;

இப்போது, கொழும்பு மாநகர சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் பதிராஜ ஆரச்சிலாகே சுனில் சேனாரத்ன ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 66அ(1) ஆம் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு இம்தியாஸ் அஹ்மட் கலீலுர் றஹ்மான் என்பவர் கொழும்பு மாநகர சபையின் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

**பீ. ஏ. எஸ். சேனாரத்ன,**
தெரிவத்தாட்சி அலுவலர்,
கொழும்பு மாநகர சபை.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
கொழும்பு நகரம்,
*2020, ஓகத்து 28.*

*09-327*

1A - G 32779— 29 (2020/08) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*